## பிரிவு –4

## பணியாளரமைப்பு முறை

**ஊராட்சிகள், ஊராட்சி ஒன்றியங்கள், பேரூராட்சிகள்**

**4.4.01.** சமுதாய வளர்ச்சி குறித்த தேசிய விரிவாக்கப் பணித்திட்டத்தின் தொடக்ககால விரிவாக்கக் கோட்பாடு மாறிவிட்டது. தற்போது, ஊரக வளர்ச்சித் திட்டங்களின் பயன்களை மக்கள் அநேகமாக நன்கு தெரிந்து வைத்திருக்கிறார்கள். எனவே, ஊரக வளர்ச்சித் திட்டங்களை முனைப்பாகச் செயற்படுத்தும்போது சந்திக்க வேண்டியுள்ள சவால்களைச் சமாளிப்பதற்காக, ஊராட்சி ஒன்றிய அளவில் பணியாளரமைப்பைச் சீரமைக்க வேண்டிய அவசியம் எழுந்துள்ளது. இதனை உணர்ந்து, அரசு (நிதித்துறை) சென்னை அண்ணா மேலாண்மை நிறுவனத்தின் பொறுப்பில் பணிக்குழு ஒன்றை ஏற்படுத்த ஒப்புக் கொண்டுள்ளது. எனினும், இப்பணிக் குழுவின் பரிந்துரைகளின் நுட்பத் தன்மையைக் கருதி இது குறித்து அரசு அளவில் ஆய்வு செய்யப்பட்டு வருவதையும் கருத்திற்கொண்டு மாநில நிதி ஆணையம் தீர ஆய்வு செய்து, பணிக்குழுவின் பரிந்துரைகள் குறித்து கருத்து தெரிவிக்கமாலிருப்பது என்றும் அவசியமாயின் இப்பணிக் குழுவின் அறிக்கையைப் பரிசீலிக்க அரசிடமே விட்டு விடவும் முடிவு செய்தது. ஆயினும், ஒரு சில ஆலோசனைகள் கீழே தெரிவிக்கப்பட்டுள்ளன.

**4.4.02.** ஊராட்சிகளில், தெருக்களை சுத்தப்படுத்துவது, துப்புரவு செய்வது போன்ற அன்றாடப் பணிகளைப் பொறுத்தவரை அவற்றை ஒட்டு மொத்த குத்தகைகளின் அடிப்படையில் தனியார் வசம் ஒப்படைக்கப்படலாம் என்றும் இதற்கெனத் தனியாகப் பணியாளர் எவரையும் நியமிக்க வேண்டுவதில்லை என்றும் ஆணையம் கருதுகிறது.

**4.4.03.** ஒன்றிற்கு மேற்பட்ட உள்ளாட்சி அமைப்புகள் அதாவது ஊராட்சிகள், பேரூராட்சிகள், நகராட்சிகள் முதலியவற்றை உள்ளடக்கிய கூட்டுக் குடிநீர் வழங்கும் திட்டங்களைப் பொறுத்தமட்டில், இவற்றின் பராமரிப்புப் பணிகளை தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்திடமே விட்டுவிடலாம். கூட்டு குடிநீர் வழங்கு திட்டங்கள் நீங்கலாக ஏனைய குடிநீர் வழங்கு பணிகளைப் பொறுத்தவரையில் பராமரிப்புப் பணியை உள்ளாட்சி அமைப்பிடம் விட்டுவிடலாம் எனவும், இந்த வகையில் உதவி ஏதேனும் தேவைப்படின் ஒவ்வொரு குடியிருப்புப் பகுதியிலும் உள்ள பயிற்சி பெற்ற தொண்டு நிறுவனங்களை நாடலாம் என்றும் ஆணையம் கருதுகிறது.

**4.4.04.** எனவே, ஆணையம் பின்வருமாறு பரிந்துரைக்கிறது.

1. சமுதாய வளர்ச்சித் திட்டங்கள் ஊராட்சி ஒன்றியங்களிடம் ஒப்படைக்கப்பட்ட போது தான், தற்போதைய அமைப்பு முறை ஏற்படுத்தப்பட்டதால், உள்ளாட்சி மன்றங்களின் கட்டமைப்பை, குறிப்பாக, ஊரக உள்ளாட்சி மன்றங்களின் கட்டமைப்பைச் சீரமைக்க வேண்டிய அவசியம் ஏற்பட்டுள்ளது. அரசு (நிதித் துறை) இதனை உணர்ந்து, சென்னை அண்ணா மேலாண்மை நிருவாகப் பயிற்சி நிறுவனத்தின் பொறுப்பில் பணிக்குழு ஒன்றை ஏற்படுத்த ஒப்புக் கொண்டது. இருப்பினும், இது தொடர்பாக பணிக்குழு அளித்த பரிந்துரைகள்

கூர் உணர்வுடையதாக இருப்பதைக் கருத்திற்கொண்டும், அரசு நிலையில் இது குறித்து பரிசீலிக்கப்பட்டு வருவதாலும், பணிக் குழுவின்இப்பரிந்துரைகள் குறித்து கருத்து ஏதும் தெரிவிக்காமலிருப்பது என்றும், அவசியமெனக் கருதப்பட்டால், பணிக் குழுவின் அறிக்கையின் மீது நடவடிக்கை எடுக்க அரசிடமே விட்டுவிடுவது என்றும் மாநில நிதி ஆணையம், தீர ஆய்வு செய்த பின்னர் முடிவு செய்துள்ளது.

2. ஊராட்சிகளில் தெருக்களைச் சுத்தம் செய்வது, துப்புரவுப்பணி முதலான அன்றாடப் பணிகள் ஒட்டு மொத்த ஒப்பந்தங்களின் அடிப்படையில் தனியாரிடம் விடப்படலாம். ஊராட்சிகளைப் பொறுத்தவரையில் தனியாகப் பணியாளர்கள் எவரையும் நியமிக்க வேண்டுவதில்லை.

3. பல அமைப்புகள் அடங்கிய அதாவது ஊராட்சிகள், பேரூராட்சிகள், நகராட்சிகள் ஆகியவற்றை உள்ளடக்கிய பகுதிக்கான ஒருங்கிணைந்த குடிநீர் வழங்கல் திட்டங்களைப் பொறுத்தவரையில், பராமரிப்புப் பணியை, தமிழ் நாடு குடி நீர் வடிகால் வாரியத்திடம் விட்டு விடுவது நல்லது.. ஒருங்கிணைந்த குடிநீர் வழங்கல் திட்டங்கள் நீங்கலான ஒவ்வொரு ஊராட்சிக்கும் தனித்தனியே குடிநீர் வழங்கி வருகின்ற ஏனைய குடி நீர் வழங்கல் திட்டங்களைப் பொறுத்தமட்டில், பராமரிப்புப் பணியை ஊராட்சியின் பொறுப்பில் விடுவது சிறந்தது. இந்த ஊராட்சிகள், தேவைப்படின் இப் பணிக்கென பயிற்சி பெற்ற உள்ளூர் தொண்டு அமைப்புகளின் உதவியை நாடலாம்.

**4.4.05.** அனைத்து ஊராட்சி ஒன்றியப் பணிகளும், ஒரு ஒன்றியப் பொறியாளர் மற்றும் இரு மேற்பார்வையாளர்களின் உதவியுடன் செயற்படுத்தப்படுகின்றன. இவர்கள், ஆண்டொன்றுக்கு ரூ.80 இலட்சத்திலிருந்து ரூ.150 இலட்சம் வரை மதிப்புள்ள பணிகளை மேற்கொள்கின்றனர். பொறியியல் பணியாளர்கள் அனுமதிப்பதற்கான அளவுகோல், கடைசியாக ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறையின் 11.10.1980 நாளிட்ட 1207 ஆம் எண் அரசாணையில் நிர்ணயிக்கப்பட்டது. விவரம் பின்வருமாறு:

| | | | | |
|---|---|---|---|---|
| (i) | ரூ. 5 இலட்சம் வரையிலான மதிப்பீடு பணிகளுக்கு | ஒன்றியப் பொறியாளர்<br>மேற்பார்வையாளர் | –<br>– | 1<br>1 |
| (ii) | ரூ.5 இலசட்த்திலிருந்து ரு.8 இலட்சம் வரையிலான மதிப்பீடு பணிகளுக்கு | ஒன்றியப் பொறியாளர்<br>மேற்பார்வையாளர்கள் | –<br>– | 1<br>2 |
| (iii) | ரூ. 8 இலட்சத்திலிருந்து ரூ.12 இலட்சம் வரையிலான மதிப்பீடு பணிகளுக்கு | ஒன்றியப் பொறியாளர்கள்<br>மேற்பார்வையாளர்கள் | –<br>– | 2<br>2 |

**4.4.06.** தற்போது ஒரு ஊராட்சி ஒன்றியத்தின் இயல்பான பணிச்சுமை அதிகரித்துள்ளது. ஊராட்சி ஒன்றியப் பகுதிகள் முழுவதும் பணிகள் நடைபெறுகின்றன. இப்பணிகளை பல முனைகளில் தொடர்ந்து கண்காணிக்க வேண்டியிருக்கிறது. எனவே, ஊராட்சி ஒன்றிய அளவில், பொறியியல் பணியாளர்களின் எண்ணிக்கையை அதிகரிக்க வேண்டிய அவசியம் எழுந்துள்ளது. ஒவ்வொரு

ஊராட்சி ஒன்றியத்திற்கும் கூடுதலாக ஒரு ஒன்றியப் பொறியாளர் பதவிக்கு ஒப்புதல் அளித்து அரசு பிறப்பித்தத ஆணைகள் இதுவரை செயல்படுத்தப்படவில்லை. தற்போது பணிகள் தொடர்பான ஒதுக்கீடு மிக அதிகமாக இருப்பதால், ஒவ்வொரு ஊராட்சி ஒன்றியத்திற்கும் கூடுதலாக ஒரு ஒன்றியப் பொறியாளரை நியமிப்பதால் மட்டுமே பிரச்சினை தீர்ந்து விடப்போவதில்லை. இனிமேல் கூடுதல் நிதி ஒதுக்கீடு ஒரு வழக்கமான நிகழ்வாகவும் ஆகிவிடலாம். இப்பிரச்சினை குறித்து ஆணையம் மாவட்ட அமர்வுகளின்போது, சில ஒன்றிய பொறியாளர்களுடனும், வட்டார வளர்ச்சி அலுவலர்களுடனும், கோட்ட வளர்ச்சி அலுவலர்களுடனும், ஒரு சில மாவட்ட ஆட்சியாளர்களுடனும் கலந்தாலோசித்ததில், ஒன்றிய பொறியாளர்கள் மீது ஒரு பக்கம் நெடுஞ்சாலை மற்றும் கிராமப் பணிகள் துறை, மற்றொரு பக்கம் மாவட்ட வளர்ச்சி நிருவாகம் என்ற இரட்டைக் கட்டுப்பாட்டு முறை அதிக இடையூறுகளை ஏற்படுத்தியுள்ளது தெரியவந்தது. ஒன்றியப் பொறியாளர்களின் பணியைத் தங்களால் திறம்பட பயன்படுத்திக்கொள்ள இயலவில்லை என்று வட்டார வளர்ச்சி அலுவலர்களும், கோட்ட வளர்ச்சி அலுவலர்களும் தெரிவித்த கருத்துக்களுக்கு சில மாவட்ட ஆட்சியாளர்களும் ஆதரவு தெரிவித்தனர். அத்துடன் தொழில் நுட்பப் பணியினர்களிடம் வேலை வாங்குவது சிரமமாக உள்ளது என்றும் தெரிவித்தனர். இது ஒரு புறமிருக்க, ஒன்றியப் பொறியாளர்கள், வரையறுக்கப்பட்ட அளவை விட மூன்று அல்லது நான்கு மடங்கு பணிகள் தங்கள் மீது சுமத்தப்படுகிறது என்றும், அந்தந்த நிதியாண்டு முடிவதற்குள் அனைத்துப் பணிகளையும் முடிக்க வேண்டுமென்று தாங்கள் கட்டாயப்படுத்தப்படுவதால், பணியின் தரம் குறைவது தவிர்க்க இயலாததாகி விட்டது என்றும் தங்களின் குறைகளைத் தெரிவித்தனர். இரு தரப்பிலும் நியாயம் இருப்பதாக ஆணையம் கருதுகிறது. ஒன்றியப் பொறியார்களின் பணிச்சுமை அதிகமாக உள்ளது என்பதில் எவ்வித ஐயமும் இல்லை. ஒன்றியம் முழுவதிலும் பல்வேறு பகுதிகளில் ஒரே சமயத்தில் பல பணிகள் செயல்படுத்தப்படுவதால், ஊராட்சி ஒன்றியத்தில் உள்ள பொறியியல் பிரிவை வலுப்படுத்த வேண்டியது அவசியம் ஆகிறது. பேரூராட்சிகளிலும் ஒப்படைக்கப்பட்ட திட்டப் பணிகள் அல்லது அவற்றின் சொந்த நிதிகளைக் கொண்டு மேற்கொள்ளப்படும் பணிகளை நிறைவேற்றுவதற்குத் தொழிற்நுட்ப ஆதரவு அநேகமாக அறவே இல்லை.

**4.4.07.** எனவே, மாநில நிதி ஆணையம் பின்வருமாறு பரிந்துரை செய்கிறது.

> பல்வேறு உள்ளாட்சி மன்றங்களில் மேற்கொள்ளப்படும் திட்டங்கள் அல்லது பிற வகையிலான பணிகள் அதிகரித்து வருவதால், குறிப்பாக ஊராட்சி ஒன்றியங்களிலும், பேரூராட்சிகளிலும் பொறியியல் பிரிவை ஏற்படுத்த வேண்டிய , வலுப்படுத்த வேண்டியதன் அவசியம் அதிகரித்து வருகிறது. உள்ளாட்சி மன்றங்களில் ஆண்டுதோறும் மேற்கொள்ளும் பணிகளையொட்டி மேற்சொன்ன தேவை குறித்து அரசு பரிசீலிக்கலாம்.

### நகராட்சிகள் மற்றும் மாநகராட்சிகள்

**4.4.08.** சம்பந்தப்பட்ட நிர்வாகப் பிரச்சினைகளுக்குத் தீர்வு காணாமல் செம்மையான நகர்ப்பகுதி உள்ளாட்சி மன்ற நிருவாகம் குறித்து பேசுவது பொருத்தமுடையதாக இராது. நகராட்சி மன்றங்கள், நகர்ப்பகுதி மக்களின் அன்றாட வாழ்க்கை மற்றும் சுற்றுச்சூழலைப் பாதிக்கின்ற எண்ணற்ற அலுவல்களையும், பணிகளையும் முழு வீச்சில் கவனிப்பதால், நகராட்சிப் பணியாளர் அமைப்பு நிருவாகம் மிக முக்கியத்துவம் பெறுகிறது. இவை தவிர, இந்தியாவில் நகராட்சி நிருவாகம், தொழிலாளர்களை அடிப்படையாகக் கொண்டு நடைபெறுவது கவனிக்கப்பட வேண்டிய மற்றொரு முக்கியமான அம்சம் ஆகும்.

**4.4.09.** மாநில நிதி ஆணையம், வரைமுறைக் குழுவின் (Norms Committee) பரிந்துரைகளையும், அது குறித்து பிறப்பிக்கப்பட்ட அரசாணைகளையும் பரிசீலித்து, இவ்வாணையம் தற்போதுள்ள அரசாணைகளைப் பின்பற்றலாம் என்பதை ஏற்றுக் கொள்கிறது. இத்திட்டப் பணிகளை நிறைவேற்ற, திட்டப் பணியாளர்கள் தேவைப்படலாம்.

**4.4.10.** எனவே மாநில நிதி ஆணையம் பின்வருமாறு பரிந்துரை செய்கிறது.

> மத்திய அரசின் நிதியுதவி பெறும் சிறு மற்றும் நடுத்தர நகரங்களின் ஒருங்கிணைந்த வளர்ச்சித் திட்டம், மாநில அரசின் நிதியுதவி பெறும் ஒருங்கிணைந்த நகர்ப்பகுதி வளர்ச்சித் திட்டம், நகராட்சி நகர்ப்பகுதி வளர்ச்சி நிதி, குடிநீர் வழங்கல் திட்டம் போன்ற சிறப்புத் திட்டங்களைப் பொறுத்தவரையில், திட்டப்பணியாளர்கள் குறித்த செலவினை, அவர்கள் தற்காலிகமாக நியமிக்கப்பட்டிருந்தாலும் அல்லது ஏற்கெனவேயுள்ள பணியார்களாக இருந்தாலும், திட்டப்பணியில் சேர்க்கப்பட்டு, ஒட்டு மொத்தத் திட்டச் செலவின் ஒரு பகுதியாக அமைத்தல் வேண்டும்.